# குடும்ப வன்முறைப் பிரச்சினைக்கு ஒன்று சேர்ந்து தீர்வு காண்போம்



இந்திராணி ராஜா

குடும்பமே நம் சமுதாயத்தின் ஆணி வேர். பெரும்பாலான சிங்கப்பூர் குடும்பங்களில் வலுவான குடும்ப உறவு நிலவுகிறது. இவர்களில் 90 விழுக்காட்டினருக்குக் குடும்ப வாழ்க்கை மனநிறைவாக இருக்கிறது. வலுவானதொரு குடும்பத்தில் அன்பும், ஆதரவும் ஒற்றுமையும் நிலைத்திருக்கும்.

ஆனால், எல்லாக் குடும்பங்களிலும் சீரான உறவுமுறை நிலைப்பதில்லை. குடும்ப வன்முறையால் சில குடும்பங்கள் பாதிப்படைகின்றன. இதனால், குடும்பத்தின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் நீண்டகால, பாதகமான விளைவுகள் நேரக்கூடும்.

குடும்ப வன்முறை குறிப்பிட்டதொரு சமூகத்தில் அல்லது இனத்தில் மட்டுமே நிகழ்வதில்லை. எல்லா பிரிவினரிடையிலும் குடும்ப வன்முறை நேர்கிறது. ஆயினும், கல்வி, இனம், கலாசாரம் போன்ற காரணங்கள், குடும்ப வன்முறையை ஒருவர் கையாளும் முறையை நிர்ணயிக்கக்கூடும்.

இந்தியக் குடும்பங்களில் வாழ்க்கைத்துணையிடம் வன்முறையை வெளிப்படுத்துதல், குழந்தைகளைத் துன்புறுத்துதல், வளர்ந்த பிள்ளைகள் பெற்றோரைத் துன்புறுத்துதல் அல்லது வளர்ந்த பிள் ளைகளைப் பெற்றோர் துன்புறுத்துதல் ஆகியன அடிக்கடி காணப்படும் குடும்ப வன்முறைகளாக இருப்பதாக 'பேவ்' (PAVE) அமைப்பு கூறுகிறது.

வன்முறைக்கு இலக்காவோர் சில சமயங்களில் உதவி நாட விரும்புவதில்லை அல்லது இயலுவதில்லை. சில பிள்ளைகள் உதவி நாடத் தெரியாத அளவுக்கு மிகவும் சிறு வயதினராக இருக்கக்கூடும். முதியோர் உடலியல் அல்லது மனோவியல் காரணங்களால் உதவி நாட இயலாமல் இருக்கக்கூடும்.

குறிப்பாகப் பெண்கள் உதவி நாடத் தயங்குகின்றனர். இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன:

• தங்களது அன்பும் அக்கறையும் வன்முறையில் ஈடுபடுபவரை எப்படியாவது காலப்போக்கில் மாற்றிவிடும் என அவர்கள் நம்புகின்றனர்.

• அவர்கள் வன்முறையில் ஈடுபடுபவரின் பண ஆதரவை நம்பி இருக்கின்றனர்.

• அவர்கள் தங்களது பிள்ளைகளுக்காக வன்முறையைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றனர்.

• அவர்கள் உதவி நாடிச் சென்றால், வாழ்க்கைத்துணை என்ன செய்வாரோ எனப் பயப்படுகின்றனர்.

இத்தகையோர், தங்களது உறவினர்களுக்குத் தெரிய வந்தால் அவமானமாக இருக்கும் என அஞ்சி, அல்லது வன்முறைக்கு இலக்காகும் வகையில் ஏதோ தவறு செய்துவிட்டதாகக் குற்ற உணர்வு கொண்டு, மௌனமாக இருந்து அவதிப்படுவது வழக்கம்.

அவர்கள் படும் வேதனையை மற்றவர்களால் உணரமுடியாது. காரணம், அவர்கள் தங்கள் வலியையும் வேதனையையும் வெளியே காட்டாமல் தங்களுக்குள் மறைத்து விடுவார்கள். ஆனால், குடும்ப வன்முறையை மூடி மறைத்து மௌனம் சாதிப்பது சரியல்ல.

முதலாவதாக, குடும்ப வன்முறையைப் பற்றி புகார் செய்யாவிட்டால், வன்முறைக்கு இலக்காவோர் தொடர்ந்து அவதிப்படுவார்கள். குடும்ப வன்முறை நீண்டகாலத்திற்கு நீடித்து, வன்முறைக்கு இலக்கானவரின் வாழ்க்கை முழுவதும் எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

குடும்ப வன்முறையால் பிள்ளைகளின் உணர்வுகளும் அறிவாற்றலும் வெகுவாகப் பாதிக்கப்படும். வன்முறையை நேரில் கண்டு அதிர்ச்சியடையும் பிள்ளைகளின் சிந்தனை அல்லது காரண ஆய்வு பாதிப்படைவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. வாழ்க்கைத்துணை வன்முறையைக் கையாளும்போது, பிள்ளைகள் புதிய விவரங்களைப் பரிசீலித்து பயன்படுத்தக்கூடிய ஆற்றல் பாதிப்படையலாம் என சில ஆய்வுகள் கூறுகின்றன.

ஆக, வாழ்க்கைத்துணை வன்முறை பிள்ளைகளை மன அளவில் மட்டும் பாதிப்பதில்லை. அவர்களின் கல்வித் திறனும் பேசும் ஆற்றலும் கணித அறிவும் பாதிக்கப்படுகின்றன. வாழ்க்கைத்துணை வன்முறையைத் தொடர்ந்து பிள்ளைகள் பார்த்து வந்தால் அது அவர்களுக்குள் பெரும் உளைச்சலை உண்டாக்கக்கூடும். அடிக்கடி சண்டை போட்டுக்கொள்ளும் பெற்றோர்களால் அதைக் கவனிக்க முடியாமலும் போய் விடும்.

இரண்டாவதாக, வன்முறையைப் பற்றி புகார் செய்யாதிருக்கும்போது, வன்முறையில் ஈடுபடுபவருக்கு எந்த வகையிலும் உதவ முடியாது. பொதுவில் வன்முறையில் ஈடுபடுவோர் அதைச் செய்வதற்குக் காரணம், அவர்கள் சிறுவயதில் இருந்தபோது தங்கள் பெற்றோர்கள் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்த்திருப்பார்கள்.

இதர சம்பவங்களைப் பார்க்கும்போது, தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற முடியாத குடும்ப உறுப்பினர்கள் மீது பிள்ளைகள் வெறுப்பை வளர்த்துக்கொள்கிறார்கள். அதுவே நாளடைவில் அவர்களுக்கு எதிராக வன்முறையைக் கையாளத் தூண்டுகோலாக அமைந்துவிடுகிறது.

இத்தகையோர் தங்களது நடத்தையை மாற்றிக்கொள்ள உதவி தேவைப்படுகிறது. அவர்கள் செய்வது தவறு என்றும் தங்கள் செயலால் எந்த அளவுக்கு தங்கள் அன்புக்குரியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சில சூழ்நிலைகளில், குற்றவியல் தண்டனையும் அவசியமாகிறது.

குடும்ப வன்முறையின் கொடிய சுழலிலிருந்து விடுபட, தெளிவான முனைப்புமிக்க அணுகுமுறை அவசியம்.

• வன்முறைக்கு இலக்காவோர் அது பற்றிப் புகார் செய்ய அல்லது உதவி செய்யக்கூடிய ஒருவரிடம் அதுபற்றிச் சொல்ல தைரியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

• வன்முறையில் ஈடுபடுவோர் தங்களுக்கு ஒரு பிரச்சினை இருப்பதை ஒப்புக்கொண்டு, தங்களை மாற்றிக்கொள்ள உதவி நாடுவதற்குத் தைரியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

• சமூகம் வன்முறையைக் கடிந்து, வன்முறைக்கு இலக்காவோருக்கு ஆதரவாக இருந்து, வன்முறையில் ஈடுபடுவோர் கண்டிப்பாக மாறித்தான் ஆகவேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும்.

குடும்ப வன்முறை பற்றி வெளியில் சொல்வது வெட்கக்கேடானது என்றோ அதனால் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றோ பாதிக்கப்பட்டவர்கள் தயங்கினால், ஒரு குடும்பமாகவோ ஒரு சமூகமாகவோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.

குடும்ப வன்முறை பிரச்சினையைத் தங்களுள்ளேயே வைத்துக்கொண்டு தாங்களே சமாளித்துக்கொள்ளலாம் என்று நினைப்பதை விடுத்து, தைரியமாகப் பிரச்சினையை எதிர்கொள்ள பாதிக்கப்பட்டவர்கள் முன்வர வேண்டும். உதவி தேவைப்படுவோர் எளிதில் உதவி பெற இயலும்.

• உதவி தேவைப்படுவோர், சிங்கப்பூரின் முன்னோடி குடும்ப வன்முறை நிபுணத்துவ நிலையமான பேவ் (PAVE) அமைப்பை அணுகலாம். வன்முறையற்ற ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க இவ்வமைப்பு செயல்படுகிறது. வன்முறைக்கு இலக்காவோர், வன்முறையில் ஈடுபடுவோர், வன்முறையிலிருந்து உயிர் பிழைத்தோர், பிள்ளைகள், முதியோர் போன்ற பலவீனமான நிலையிலுள்ள குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருக்கான சேவைகளை அமைப்பு வழங்குகிறது.

• சமூக அங்கத்தினர்கள் சிண்டா குடும்பச் சேவை நிலையத்தையும் அணுகலாம். சிண்டா குடும்பச் சேவை நிலையத்தால் குடும்பங்களின் முழுமையான வளர்ச்சிக்குத் துணைபுரியும் திட்டங்கள் உட்பட, முழுமையான உதவியும் ஆலோசனையும் வழங்க இயலும்.

• வன்முறையான வீடுகளில் வாழும் பிள்ளைகளுக்காகப் பள்ளிகள், குடும்பச் சேவை நிலையங்கள், குடும்ப வன்முறை நிபுணத்துவ நிலையங்கள் ஆகியவற்றில் பிள்ளைகளின் துன்ப நிலையை மையப்படுத்தும் புலனுணர்வு நடத்தை சிகிச்சை நடத்தப்படுகிறது.

• குடும்ப வன்முறைக்கு இலக்கான குடும்ப உறுப்பினர்கள் தனிநபர் பாதுகாப்பு ஆணை அல்லது விரைவு பாதுகாப்பு ஆணை பெற குடும்ப நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். வன்முறையாளரால் குடும்பத்திற்குக் கடுமையான ஆபத்து நிலவும் மோசமான சூழ்நிலைகளில், வீட்டு விலக்கல் ஆணையின்கீழ் வீட்டைவிட்டு வெளியேறுமாறு வன்முறையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிடலாம்.

• சட்ட ஆலோசனை அல்லது சட்டப் பிரதிநிதி தேவைப்படுவோர், தங்களுக்கு வசதி இல்லாவிட்டால், சட்ட உதவி மன்றத்தை, சமூக நீதி மையத்தை அல்லது சமூக சட்ட உதவி நிலையங்களை அணுகலாம்.

நாம் குடும்ப வன்முறையைத் தடுத்து நிறுத்த ஒன்றுசேர்ந்து செயல்பட்டு, அன்பும் மரியாதையும் நிலவும் வலுவான, ஆரோக்கியமான சூழலைக் குடும்பங்களில் ஊக்குவிக்க வேண்டும்.

## ஒன்றுபடுவோம் உயர்வோம்

*பிரதமர் அலுவலக அமைச்சரும் கல்வி, நிதி இரண்டாம் அமைச்சரும் சிண்டாவின் தலைவருமான குமாரி இந்திராணி ராஜா, இந்தியச் சமூகம் சார்ந்த முக்கிய விவகாரங்களையும் அக்கறைகளையும் கலந்துபேசும் மாதாந்தர கட்டுரை.*

*ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று தமிழ் முரசில் தவறாமல் படித்திடுங்கள்.*